# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • மார்ச் 14, 2020

Weekly E-paper • March 14, 2020




# திரைப்படத்தில் பாட்ஷா அரசியலில் செந்தில்!

• சுப.வீரபாண்டியன்

## எஸ் பேங்கின் அலங்கோலங்கள்

மால்மருகன்

## கொரோனாவால் பயமுறுத்தல்

தலையங்கம்

## நூற்றாண்டை நெருங்கிய பேராசிரியர்

பொள்ளாச்சி மா.உமாபதி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • மார்ச் 14, 2020 Weekly E-paper • March 14, 2020


# திரைப்படத்தில் பாட்ஷா அரசியலில் செந்தில்!

- சுப.வீரபாண்டியன்

கடந்த 12 ஆம் தேதி, சென்னையில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில், "மக்களிடம் எழுச்சி வரட்டும், அப்ப நான் வரேன்" என்று, திரைப்படப் பாணியில் ஒரு 'பன்ச் டயலாக் ' சொல்லிவிட்டு, மேடையிலிருந்து இறங்கினார் ரஜினிகாந்த்..



இன்று (14.03.2020) காலை நாளேடுகளில், "மக்களிடம் எழுச்சி வந்துவிட்டதாக ரஜினி நம்புகிறார் என்றும், இன்னும் ஒரு வாரத்தில் ஒரு சிற்றூரில் (பெரும்பாலும் புவனகிரி) கட்சியின் முதல் கூட்டம் நடைபெறலாம் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாமும் இதே ஊரில்தான் இருக்கிறோம். இடைப்பட்ட ஒரே நாளில் என்ன புரட்சி நடந்துவிட்டது என்று நமக்குத் தெரியவில்லை.

சரி, இது குறித்து ஏன் நீங்கள் மீண்டும் மீண்டும் எழுதிக் கொண்டுள்ளீர்கள் என்று நண்பர்கள் சிலர் கேட்கின்றனர். அப்படியில்லை. மக்களிடம் சென்று சேரும் கருத்துகள் தவறானவை என்று நாம் கருதினால், அதற்கான மறுமொழியை மக்கள் மன்றத்தில் வைப்பதே, அரசியலில் நேர்மையானது.

45 ஆண்டுகள் திரைப்படங்களில் நடித்ததன் மூலம், ரஜினி பெற்றுள்ள புகழை நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. மேலும், ஊடகங்கள் அவருக்குக் கொடுக்கும் அளவற்ற விளம்பரத்தையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். இரண்டு நாள்களுக்கு முன், "இதோ ரஜினி வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார், இதோ ரஜினி லீலா பேலஸை அடைந்துவிட்டார்' என்றெல்லாம் அளவுக்கு மீறிய வருணனைகள் சொல்லப்பட்டதைப் பார்த்தோம். ஆதலால் நாமும் மக்களிடம் பேசியே ஆகவேண்டும்.

தமிழகத்தில் வெற்றிடம் உள்ளது என்றவர், இரண்டு ஜாம்பவான்கள் உள்ளனர், அவர்களை அகற்றுவதற்கு இதுவே சரியான நேரம் என்றும் சொன்னார். எவ்வளவு முரண்! ஜாம்பவான்கள் இருக்கும் இடம் எப்படி வெற்றிடம் ஆகும்?

அறிஞர் அண்ணாவின் ஆட்சியைப் பாராட்டியவர், அடுத்த நிமிடமே, 54 ஆண்டு கால ஆட்சியை அகற்ற வேண்டும் என்றார். அதில் அண்ணாவின் ஆட்சிக் காலமும் அடங்குமே! பிறகு ஏன் அதனையும் சேர்த்து அகற்ற வேண்டும்?

இரண்டு உவமைகள் சொன்னார். அதில் ஒன்று, மீன் குழம்பு வைத்த பாத்திரத்தைக் கழுவாமல், சர்க்கரைப் பொங்கல் வைக்கக் கூடாது என்றார்.

இங்கே மீன் குழம்பு அகற்றப்பட வேண்டிய ஆட்சிக்கும், சர்க்கரைப் பொங்கல் வரப்போகும் ஆட்சிக்கும் பொருத்தப்படுகிறது. அதாவது மீன் குழம்பு தாழ்ந்தது என்பதும், சர்க்கரைப் பொங்கல் உயர்ந்தது என்பதும், பொதுப்புத்தியில் உறைந்துள்ள எண்ணம். அந்தக் கருத்து ரஜினியிடமும் உள்ளது என்பது தெரிகிறது. ரஜினிக்கு ஒன்றைச் சொல்ல வேண்டியுள்ளது, பெரும்பான்மையாகவும், பரந்துபட்டும் , மீன் குழம்பு உழைக்கும் மக்களின் உணவாக இருப்பதும், சர்க்கரைப் பொங்கல், அவாளின் விருப்ப உணவாக இருப்பதும் அனைவரும் அறிந்த ஒன்று.

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

உதவி ஆசிரியர்கள்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

தொலைபேசி: 044-2472 6408

## 1-ஆம் பக்கத் தொடர்ச்சி...

உணவில் கூடவா அரசியல் என்று கேட்கக்கூடாது. எல்லாவற்றிலும் இங்கு சாதியும், மதமும் ஒளிந்து நிற்கின்றன. கும்பகோணம் டிகிரி காபி கடைக்கும், பீப் பிரியாணி கடைக்கும் இடையில் உணவு மட்டுமே வேறுபடவில்லை. சமூக அரசியலும் வேறுபடுகிறது என்பார் பேராசிரியர் அ. மார்க்ஸ்.

50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லை என்றால், அவர்களெல்லாம் கட்சியை விட்டுப் போய்விடுவார்களோ என்ற அச்சத்தில், அதற்கு பாண்டே மூலம் ஒரு விளக்கம் சொல்லப்படுகிறது. உங்களுக்குத்தான் இடம் இல்லை என்று ரஜினி சொன்னாரே தவிர, உங்கள் மனைவி, பிள்ளைகள், தம்பி, தங்கைகள் போட்டியிடும் வாய்ப்பைப் பெறக்கூடும் இல்லையா என்று சமாதானம் சொல்கிறார் பாண்டே.

பதவி ஆசை கூடாது என்று ஒரு பக்கம் அறிவுரை சொல்வது, பிறகு, கொல்லைப்புற வழியாகப் பதவிக்கு வந்துவிடலாம் என்று ஆறுதல் கூறுவது! நேர்மை பற்றி வாய்கிழிய பேசும் இவர்களின் திட்டங்கள் எல்லாம் நேர்மையற்றனவாக இருப்பதை என்னென்று சொல்வது!

லஞ்சம், ஊழலால் மட்டுமில்லை, கறுப்புப் பணத்தாலும், சிஸ்டம் கெட்டுக் கிடக்கிறது, அதனையும் சேர்த்து ஒழிப்பேன் என்று ரஜினி சொன்னால் அவரது நேர்மையை நாம் பாராட்டலாம். அதற்கான புரட்சியையும் அவர் ஏற்பாடு செய்ய வேண்டும். வேறு யாரோ எழுச்சியை ஏற்படுத்தியபின், இவர் அதற்குத் தலைமை தாங்க நினைக்கக் கூடாது.

புரட்சியை யாரும் இறக்குமதி செய்ய முடியாது. போராட்டங்கள் இல்லாமலும் புரட்சியை நடத்த முடியாது.

திரைப்படப் படப்பிடிப்புகளில் நாம் பார்த்திருக்கிறோம். பெரிய நடிகர்கள் வெளியில் அமர்ந்திருப்பார்கள், உள்ளே எல்லா வேலைகளும் முடிந்தபின், உதவி இயக்குனர்கள் நடிகர்களிடம் வந்து, ‘ஷாட் ரெடி’ என்றதும், இவர்கள் உள்ளே நடிக்கச் செல்வார்கள்.

அரசியலிலும் ரஜினி அதனையே எதிர்பார்க்கிறார். எல்லா வேலைகளையும் ஊடகவியலாளர்களும், மன்ற உறுப்பினர்களும் முடித்துவிட்டு, ரஜினியிடம் வந்து, ’புரட்சி ரெடி’ என்று சொன்னவுடன், இவர் களத்துக்கு வந்துவிடுகிறேன் என்கிறார்.

ஆறுமுக நாவலர் எழுதிய கதை ஒன்று. நம் திரைப்படத்தில் வந்துள்ளது. எல்லோரும் மலையைத் தூக்கி என் தோள் மீது வையுங்கள். நான் தூக்குகிறேன் என்பார் நடிகர் செந்தில். அப்படித்தான் இருக்கிறது ரஜினியின் பேச்சு!

திரைப்படத்தில் பாட்ஷாவாக இருந்தவர் அரசியலில் செந்திலாக ஆகிவிட்டார்!

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## கொரோனாவால் பயமுறுத்தல்

‘கோவிட்-19’ என்றால் பலருக்குத் தெரியாது. ஆனால் கொரோனா வைரஸ் என்ற பெயரைக் கேட்டதும் உலகமே அரண்டு போய் இருக்கிறது.

சீனாவின் வூஹான் மாகாணத்தில் உருவான இந்த கொரோனா, இந்தியா உள்பட ஏறத்தாழ 100-க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவிக்கொண்டிருக்கிறது.

இது மிகக்கொடுமையான உயிர்க்கொல்லி நோய். இருமல், சளி, காய்ச்சல், மூச்சுத் திணறல் என்று தொடங்கும் இந்த வைரஸ் நோய் மிகக்கொடுமையானது என்பது உண்மைதான்.

உலகத்தின் சர்வ வல்லமையுள்ள எந்த மதத் தலைவர்கள், கடவுளாலும் குணப்படுத்த முடியாத நோய் இந்நோய்.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு வரவேண்டாம் என்று திருப்பதி தேவஸ்தானமும், பெண்கள் வரக்கூடாது என்று தடை விதித்த சபரிமலையில் இன்று சளி, காய்ச்சல், இருமல் இருக்கும் ஆண்களும் நுழையக் கூடாது என்ற அறிவிப்பும் வந்துள்ளது.

சவுதி அரேபியாவில் கொரோனா கிருமிகளுக்கு அஞ்சி தொழுகைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

உலகக் கிறித்துவ மதத் தலைவரான போப் ஆண்டவர் கொரோனாவால் ஏற்படும் தொற்றுநோய் அச்சத்தில் மக்களோடு இணைந்து பிரார்த்தனை செய்வதைத் தவிர்த்து தனியாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்.

கொரோனாவுக்கு இன்னும் மருந்து கண்டு பிடிக்கவில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும் சர்வ சக்தி வாய்ந்த கடவுள்களும் இந்தக் கொரோனாவுக்கு அஞ்சி ஒடுங்கிப் போனதை நாம் செய்தி வழியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கே அஞ்ஞானத்தை விஞ்ஞானம் வென்றிருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க இந்நோய் அஞ்சத்தக்க உயிர்க்கொல்லி நோய் என்பதை உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தி, அதற்குரிய நடவடிக்கைகளை அந்தந்த நாடுகள் எடுக்க வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறது.

ஆனால் நோய் பயத்தை விட, நோயைப் பற்றி அரசு செய்கின்ற பிரச்சாரம் கொடுமையாக இருக்கிறது.

தொலைபேசி எடுத்தால் ‘லொக்கு லொக்கு’ என்ற ஒரு ஈனமான இருமல். அந்த இருமலைக் கேட்கும்போதே அவ்வைரஸ் நோய் நமக்கு ஏற்பட்டதைப் போன்று ஒரு அச்சத்தை ஏற்படுத்துகிறது. தொடர்ந்து அதில் சொல்லப்படுகின்ற நோய் குறித்த செய்தி, படித்தவர்களைத் தவிர படிக்காத, பாமர கிராம மக்களுக்கு எந்த வகையிலும் பயன்படாது.

சீனாவில் தோன்றிய இந்நோய் இன்று அங்கே குறைந்து கொண்டு வருவதாகச் செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அதற்காக அந்நாட்டு அதிபர் மருத்துவர்களைப் பாராட்டி இருக்கிறார். இவ்வைரஸ் நோய் விரைவில் ஒழிக்கப்பட வேண்டும்.

நோய் பற்றிய கவனமும், எச்சரிக்கையும் எல்லோருக்கும் வேண்டும்தான். எனினும் அதற்காக ஒவ்வொரு நிமிடமும் அஞ்சி அஞ்சிச் சாக வேண்டியதில்லை. மருத்துவ அறிவியல் மக்களைக் காப்பாற்றும்.

# 'எஸ்' பேங்கின் மர்ம முடிச்சுகள் அலங்கோலங்கள்

மால்மருகன்

எஸ் பேங்க் ("எஸ் வங்கி") 2004-ம் ஆண்டு, ராணா கபூர் மற்றும் அவரது உறவினர்களால் தொடங்கப்பட்ட ஒரு தனியார் வங்கியாகும். மிகக்குறுகிய காலத்தில் அதாவது 16 ஆண்டுகளில், நாட்டிலேயே ஐந்தாவது தனியார் வங்கியாக அது வளர்ச்சியடைந்தது. நிதியாண்டு 2018-19-இல் அது ரூ.25491 கோடி வருமானம் ஈட்டியது. ஆனால் அதன் இழப்போ ரூ.1506 கோடியாக இருந்தது.

மார்ச் 5, 2020 அன்று இந்திய ரிசர்வ் வங்கியானது, எஸ் வங்கியின் நிர்வாகத்தைத் தன்வசப்படுத்திக் கொண்டு, அந்த வங்கியின் இயக்கத்தை 30 நாட்களுக்கு முடக்கி வைத்தது.

கடந்த சில ஆண்டுகளாக எஸ் வங்கியின் வாராகடன் நிலை மிகவும் மோசமடைந்து வந்திருக்க வேண்டும். இதனால் அந்த வங்கியின் செயல்படாத கடன் சொத்துகள் வளர்ந்து கொண்டே போனதால், அவ்வங்கி இழப்பு நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த இழப்புகளை ஈடு செய்ய ஏதுவாக நிதி திரட்டவும் முடியாமல் திணறியது. மேலும் அவ்வங்கியின் வைப்பு நிதியாளர்களின் வட்டியும் முதலும் திருப்பித் தராமல் தத்தளித்தது. இந்தச் சூழ்நிலையில்தான் அதாவது வெள்ளம் தலைக்கு மேல் போன நிலையில் மத்திய அரசு வங்கியை முடக்கியது, வேறு வழியில்லாமல்.

இதனைத் தொடர்ந்து மார்ச் 7-ஆம் தேதி, முன்னாள் நிதி அமைச்சர் திரு.ப.சிதம்பரம், பத்திரிக்கையாளர்களைச் சந்தித்து எஸ் வங்கியின் நிலையை முன் வைத்தார். மார்ச் 6, அதாவது எஸ் வங்கியை முடக்கிய மறுநாள் அன்று, மும்பைப் பங்குசந்தை 884 குறியீடுகள் விழுந்தது என்றும், அதே தினம் டாலருக்கு நிகராக ரூ.58 காசுகள் (-0.74%) விழுந்தது என்றும், எஸ் வங்கியின் பங்குகளின் விலை ரூ.38.60திலிருந்து ரூ.16.15க்கு விழுந்து ஒன்றிற்கும் உதவாத பங்காக ஆனது என்றம் எடுத்துரைத்தார்.

இந்தப் பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது எஸ் வங்கியால் கொடுக்கப்பட்டுவந்த கடன் நிலுவையின் அளவு கடந்த 5 நிதி ஆண்டுகளில் அபார வளர்ச்சி அடைந்ததைச் சுட்டிக்காட்டினார்.

கடன் நிலுவை மார்ச் 2009-ல் ரூ.55,633 கோடியிலிருந்து மார்ச் 19-ல் ரூ.2,41,499 கோடிக்கு வளர்ந்தது. அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 35 சதவீதம் வளர்ச்சியடைந்து இருக்கிறது. இதே காலக்கட்டத்தில் இந்திய வங்கித்துறையின் மொத்தக் கடன் நிலுவை வெறும் 9.6 சதவீதம் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளில் அதாவது பண மதிப்பீட்டிழப்பிற்கு பிறகு இரண்டு ஆண்டுகளில் இரட்டிப்பு ஆகியுள்ளது.

இந்த விவரங்களை முன்வைத்த திரு சிதம்பரம் சரமாரியான கேள்விகளை எழுப்பினார். 2014க்குப் பிறகு யாருடைய பரிந்துரையில் புதுக்கடன்கள் வழங்கப்பட்டன. மத்திய அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் எஸ் வங்கியின் கடன் வழங்கும் படலம் தெரிந்திருக்கவில்லையா? இது என்ன வங்கியின் இயக்கமா அல்லது கொள்ளையடித்தலா? ரிசர்வ் வங்கியிலும் மத்திய அரசிலும் யாருமே எஸ் வங்கியின் நிதிநிலை அறிக்கைகளைப் படிக்கவில்லையா? எஸ் வங்கியின் 2019 ஜனவரியில் புது நிர்வாகத் தலைவரை நியமித்த பிறகு எந்த மாற்றமும் ஏன் ஏற்படவில்லை? பிறகு 2019 மே மாத்தில் முன்னாள் ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநரை ஒரு இயக்குநராக நியமித்த பிறகு எந்த மாற்றமும் நடைபெறாதது ஏன்? ஜனவரி - மார்ச் 2019-ல் பெரும் இழப்பு ஏற்பட்டபோது எந்தப் பதற்றமும் ஏற்படவில்லையா? மேலும் பத்திரிக்கையாளர் சந்திப்பில் கீழ்க்காணும் புள்ளி விவரங்களை அவர் முன் வைத்தார்.

1. டிசம்பர் 2019 வரை வங்கித்துறையின் மொத்த பாதிக்கப்பட்ட கடன் நிலுவைத் தொகை ரூ.16,88,600 கோடியாக இருந்தது. இது மொத்த கடன் நிலுவையில் 15.74% ஆகும்.

2. நிதி ஆண்டு 2014-லிருந்து மொத்தம் ரூ.7,78,000 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிலுவைத் தொகையில் 73 சதவீதம் ஆகும். 2018-19 ஆம் ஆண்டு மட்டும் ரூ.1.83 லட்சம் கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

3. வங்கித்துறையில் டிசம்பர் 2019 வரை மொத்த வாராக்கடன் ரூ.9,10,800 கோடியாக இருந்தது.

4. இப்போது முடக்கி வைக்கப்பட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வாராக்கடன் தொகையைச் சேர்த்தால், மொத்த வாராக்கடன் தொகை மேலும் அதிகரித்திருக்கக் கூடும், இதன் விவரம் மார்ச் 31, 2020க்குப் பிறகு வெளிவரும்.

5. மத்திய அரசின முத்ரா திட்டத்தில் ரூ.2 லட்சம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தில் தற்போது ரூ.12000 கோடி அளவிற்குச் செயல்படாத கடன் நிலுவை உள்ளது.

6. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் மோசடியில் சிக்குண்ட தொகை 2013-14-ல் ரூ.10,171 கோடியிலிருந்து ரூ.1,43,068 கோடிக்கு 2018-19ல் உயர்ந்துள்ளது.

திரு.சிதம்பரம் அவர்கள் மேலும் கூறுகையில் எஸ் வங்கியின் பங்குகளை, இந்திய ஸ்டேட் வங்கி ரூ.2450 கோடிக்கு வாங்குவதைக் குறை கூறினார். குறிப்பாக எஸ் வங்கியின் மூலமதிப்பு இழப்பு நிலையில் இருக்கும்போது அவ்வங்கியின் மொத்தக் கடன் சொத்தை ரூ.1-க்கு இந்திய ஸ்டேட் வங்கி தன்வயப்படுத்திக் கொண்டு வைப்பு நிதியாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பது மேன்மையாக இருக்கும் என்று கூறினார்.

எஸ் வங்கியின் பெரும்பான்மைக் கடனாளிகள் பா.ஜ.க.விற்கு மிக நெருக்கமானவர்கள் என்பது கவனிக்கத்தக்க ஒன்றாகும். இதற்கிடையில் மோடி அரசு குடியுரிமைச் சட்டம், இந்து முஸ்லீம் பூசல்கள் போன்ற செயல்களில் ஈடுபட்டும் ஊக்குவித்தும் இந்தியப் பொருளாதாரத்தின் உண்மையான நிலையை மக்களிடமிருந்து மறைத்து வைத்து இருக்கிறது. வங்கித் துறையில் தகுந்த சீர்த்திருத்தங்கள் செய்யாமல் இருந்தாலும் எஸ் வங்கியின் நிர்வாகக் குளறுபடிகள் பற்றித் துப்புத்துலங்காமல் இருந்தாலும் நாட்டிற்கு நல்லது இல்லை.

●

# வழக்கமான சூழ்ச்சி!

**மா. உதயகுமார்**

பார்ப்பனியத்தின் தன்மைகளாக வரலாற்றில் இன்றுவரை நாம் பார்ப்பது ஏமாற்றுதலும் மறைமுகமாகச் செயல்படுதலுமாகும். பார்ப்பனியம் அந்தந்த காலகட்டத்துக்கு ஏற்ப தன்னுடைய முகமூடியை மாட்டிக் கொள்கிறது. இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை கொடுப்பது போலக் காட்டிக் கொள்கிறது. மறைமுகமாகச் சனாதனத்தை நிலைநாட்டிக் கொள்கிறது.



தாழ்த்தப்பட்ட அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த திரு எல்.முருகன் என்பவரை பாஜகவின் தமிழகத் தலைவராக நியமித்து இருக்கிறார்கள்.

இந்தச் சூழலை ஏற்படுத்தியது திராவிட இயக்கம் என்பதில் மகிழ்ச்சி. ஆனால் இதில் தென்படுவதோ பார்ப்பனர்களின் வழக்கமான சூழ்ச்சி.

பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர்க்கிடையே அவர்கள் ஏற்படுத்த நினைப்பது பிளவு. பார்ப்பனரல்லாதோர் இயக்கம் கண்ட பெரியார் மண்ணில் ஒரு போதும் பலிக்காது இந்தக் கனவு.

கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் திராவிட இயக்கம் போராடிப் பெற்றுத்தந்தது இடஒதுக்கீடு. காலம் காலமாக இடம் தராமல் ஒதுக்கியவர்கள் நோகாமல் பறித்துக் கொண்டார்கள் அதில் 10 விழுக்காடு.

நீதியரசர்களாக, நிர்வாக அதிகாரிகளாகத் தாழ்த்தப்பட்டோரை உயர் பதவிகளில் அமர வைத்து திராவிட இயக்கம் வென்றெடுத்தது சமூக நீதி.

நீதிமன்றம் மூலமே தாழ்த்தப்பட்டோர் பதவி உயர்வைத் தடுத்து நிறுத்தி இன்று பார்ப்பனியம் மீட்டெடுப்பது மனுநீதி.

போராடிப் பெற்ற உரிமைகளுக்கெல்லாம் வேட்டு வைத்து விட்டு இப்போது நடத்தும் நாடகம் வெறும் ஓட்டுக்குத்தான்.வேரோடிப் போயிருக்கும் சாதியத்தால் அவர்கள் ஏற்படுத்த நினைக்கும் தேர்தல் கூட்டுக்குத்தான்.

ஆட்டுவிக்க ஒருவரை, பலமில்லாத கட்சிக்குத் தலைவராக நியமித்து விட்டால் அவர்கள் போட்டு வைத்திருக்கும் திட்டம் எல்லாம் அரங்கேறாமல் போய்விடுமா?

மாட்டு அரசியல் செய்து மனிதர்களை வாட்டி வதைக்கும் மனுவாதிகளிடம் இருந்து நாட்டை மீட்டெடுக்காமல் திராவிட இயக்கம் ஓய்ந்திடுமா?

●

## பேரவையின் பேராசிரியர் நினைவஞ்சலி




திண்டுக்கல்லில் நினைவஞ்சலி



தஞ்சாவூரில் நினைவுப் பேரணி








07-03-2020 அன்று வெளியிடப்பட்ட கருஞ்சட்டைத் தமிழர் மின்னிதழில் கட்டுரைத் தொடர்ச்சி குறித்த பக்கங்களில் ஏற்பட்ட தவறுக்காகவும், தலையங்கத்தில் அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் சூரப்பா என்பதை குமரப்பா என்று பதிவிட்டதற்காகவும் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

-பொறுப்பாசிரியர்

# நூற்றாண்டை நெருங்கிய பேராசிரியர்

**பொள்ளாச்சி மா.உமாபதி**

உலக அளவில் எந்த இயக்கத்திற்கும் கிட்டாத மாபெரும் பேறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமே கிட்டியுள்ளது. உலகப் பெரும் சீர்திருத்தவாதிகளில் ஒருவரான தந்தை பெரியார் அவர்களாலும், அவரது தலைமாணாக்கர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களாலும் வார்த்தெடுக்கப்பட்டவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் இனமானப் பேராசிரியர் அவர்களும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின் 1969 முதல் கழகத் தலைவராகவும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பிறகு 1977 முதல் இனமானப் பேராசிரியர் அவர்கள் பொதுச் செயலாளராகவும் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் இம்மாபெரும் இயக்கத்தை தங்கள் வாழ்நாள் முழுவதும் சற்றொப்ப அரைநூற்றாண்டு காலம் வழிநடத்தினர்.



அதிலும் முத்தமிழறிஞர் கலைஞர், தந்தை பெரியார் போன்று 95 அகவை வரையிலும், இனமானப் பேராசிரியர், அவர்கள் இருவரையும் கடந்து 98 அகவை வரையிலும் வாழ்ந்து மறைந்துள்ளனர். இன்னும் ஈராண்டுகள் கடந்தால், நூற்றாண்டை எட்டி விடுவார் என்று எண்ணி ஆவலோடு காத்திருந்தோம் . என்றாலும் இயற்கை வென்றுவிட்டது. கடவுள் மறுப்பாளர் களுக்கெல்லாம் நிறைந்த ஆயுள் இருக்காது; அல்ப ஆயுளில் மறைந்து விடுவார்கள்; அவர்கள் வம்சம் விருத்தியாகாது; குழந்தை பிறக்காது ; நல்வாழ்வு கிட்டாது என்று அச்சுறுத்தும் ஆத்திகர்களின் கூற்றுகளை எல்லாம் தவிடுபொடி ஆக்கியவர்கள் நம் தலைவர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் போது நம் பேராசிரியர் அவர்கள் இராமையா என்னும் தன் பெயரை அன்பழகன் என்று மாற்றிக் கொண்டார்; அத்துடன் தன் சகோதரர்களுக்கும் திருமாறன், அறிவழகன் என்று பெயரை மாற்றி அமைத்தார். பேராசிரியர் தன் கல்லூரித் தோழர்களான நாராயணசாமியை நெடுஞ்செழியன் எனவும் சோமசுந்தரத்தை மதியழகன் எனவும், திருஞானசம்பந்தத்தை நன்னன் எனவும், உடுமலை தண்டபாணியைப் பண்ணன் எனவும், கடலூர் தண்டபாணியை இளம்வழுதி எனவும் அழகு தமிழ்ப் பெயர்களை சூட்டி மகிழ்ந்தார். அவர்களைத் திராவிட இயக்கத்தின் கடற்பாறைகள் என்றே ஐயா நன்னன் குறிப்பிடுவார்.

1942ஆம் ஆண்டு அண்ணா அவர்களின் திராவிடநாடு இதழில் திருவாரூரில் மாணவனாக இருந்த கலைஞர் அவர்கள் எழுதிய "இளமைப் பலி" என்னும் கட்டுரை வெளியானது. அக்கட்டுரை கண்டு மகிழ்ந்த அறிஞர் அண்ணா அவர்கள் திருவாரூருக்கு ஒரு நிகழ்ச்சிக்காகச் சென்ற போது தன்னுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் அன்பழகனையும் அழைத்துச் சென்றார். திருவாரூரிலிருந்து திராவிடநாடு இதழுக்கு கட்டுரை அனுப்பிய எழுத்தாளர் கருணாநிதியை சந்திக்க அண்ணா விரும்பி,அவரை அழைத்து வரச்சொன்னார். அண்ணாவின் எதிர்பார்ப்புக்கு மாறாக ஒரு மாணவனாக கருணாநிதி வந்து நின்றார். மாணவர்கள் அரசியலைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் படிப்பைக் கெடுத்துக்கொண்டு அரசியலில் ஈடுபடக்கூடாது முதலில் படியுங்கள் பிறகு அரசியலில் ஈடுபடுங்கள் என்று மாணவர் கருணாநிதிக்கு அறிவுரை சொல்லி அனுப்பினார் . அறிஞர் அண்ணா சொல்லி, தான் ஏற்காத அறிவுரை இது ஒன்றுதான் என்று தலைவர் கலைஞர் அடிக்கடி கூறுவார். அந்த நிகழ்ச்சியில் அண்ணா அவர்கள் பேசும் முன்பாக, மாணவர் அன்பழகன் உரையாற்றினார். அது அனைவரையும் கவர்ந்தது; தலைவர் கலைஞர் அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. அதனால் அந்த ஆண்டு கலைஞர் நடத்தி வந்த தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற ஆண்டுவிழாவில் உரையாற்ற அன்பழகன் அவர்களையும், மதியழகன் அவர்களையும் கலைஞர் அழைத்து வந்தார். அன்று தொடங்கிய அந்த நட்பு காலம் முழுவதும் தொடர்ந்தது. அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தரப் பகைவனும் இல்லை என்று சொல்வார்கள். ஆனால் தலைவர் கலைஞர் பேராசிரியரின் நட்பு முக்கால் நூற்றாண்டுக்கும் மேலாக நீடித்தது, நிலைத்தது, இறுதி வரை தொடர்ந்தது.

தலைவர் கலைஞர் அவர்கள் பேராசிரியரைப் பற்றிக் குறிப்பிடும் போது, " தந்தை பெரியார் அவர்களுக்குப் பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, திராவிட இயக்கத்தை வழிநடத்த எனக்குப் பெரும் துணையாக இருந்தவர் பேராசிரியர்" என்று குறிப்பிடுவார், பேராசிரியர் அவர்கள் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும்போது!

என்னிடம் ஐந்து அம்சங்கள் உள்ளன. முதலில் நான் தமிழன். இரண்டாவதாக நான் அன்பழகன். மூன்றாவதாக நான் சுயமரியாதைக்காரன். நான்காவதாக நான் அண்ணாவின் தம்பி. ஐந்தாவதாக நான் கலைஞரின் தோழன். என்று குறிப்பிடுவார்.

1976ஆம் ஆண்டு நெருக்கடி நிலையில் கழகத்தின் முன்னோடித் தலைவர்கள் எல்லாம் சிறைப்பிடிக்கப்பட்டு சிறைக் கொட்டடியில் சித்திரவதைக்கு ஆளான போது தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பெரும் துணையாக இருந்தவர் நம் பேராசிரியர். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு கலைஞர் அவர்கள் கழக தலைமையை ஏற்றபோது பேராசிரியர் அவர்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தார். எனினும், அதன் பின்னர் , கலைஞரை விட்டால் தமிழ் மொழியைக் காப்பாற்ற, தமிழினத்தைக் காப்பாற்ற, தமிழ்நாட்டைக் காப்பாற்ற, வேறு நாதி இல்லை என்று உறுதிபடப் பேசியவரும் பேராசிரியர் அவர்கள்தான்.

1986ஆம் ஆண்டு ஈழத்தமிழர் உரிமை காக்க, தலைவர் கலைஞர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் இணைந்து தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பைத் துறந்தனர். 1987இல் இந்தியை எதிர்த்து இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி என்னும் சட்டப்பிரிவைத் தீக்கிரையாக்கி சிறை சென்றபோது அன்றைய முதல்வர் எம்ஜிஆர் பேராசிரியர் உள்ளிட்ட 10 பேரின் சட்டமன்ற உறுப்பினர் பதவியைப் பறித்தார். பேராசிரியர் அவர்கள் என்றைக்கும் பதவிகளைத் தேடிச் சென்றவர் இல்லை; அவரை நாடித்தான் பதவிகள் வந்தன. ஒன்பது முறை சட்டமன்ற உறுப்பினர்; ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினர்; நான்கு முறை மாநில அமைச்சர் பொறுப்புகளை வகித்த போதும் கழகத்தின் பொதுச்செயலாளராக 43 ஆண்டுகாலம் திகழ்ந்த போதும் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளுக்கு தன் நேர்மையால் தூய்மையால் மகுடம் சூட்டியவர் நம் பேராசிரியர்.

பேராசிரியர் அவர்களின் மறைவால் நாம் நலிந்து விடாமல், ஒவ்வொருவரும் பேராசிரியர் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளைத் தொட்டுத் தொடர்வதுதான் நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலி. அவர் தூக்கிப்பிடித்த இரு வண்ணக் கொடியை நாம் நம் தோள்களில் என்றும் தாழாது தாங்கிப் பிடிப்பதுதான் நாம் அவருக்குச் செலுத்தும் வீரவணக்கம். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,